28.11.2025

O.S.No. 176/2024

PW2– சேகர்– த/பெ. பூசைப்பெருமாள்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.11.2025

<u>குறுக்கு விசாரணை :</u> (1 முதல் 3, 5 பிரதிவாதிகள் தரப்பில்)

1. இந்த வழக்கு தாக்கல் செய்ய நானும், பிற வாதிகளும் சேர்ந்துதான் வழக்கறிஞருக்கு தகவல்கொடுத்தோம் என்றால் சரிதான். பிராதை படித்துப்பார்த்துள்ளேன். எதிருரையை படித்துப்பார்க்கவில்லை, அதிலுள்ள சங்கதிகள் தெரியாது. பிராதில் சொத்து வரலாறு தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் குற்றாலம் பிள்ளைக்கு தவறுதலாக கிரையம் கொடுககப்பட்டுள்ளது என சொல்லியுள்ள சங்கதி எனக்கு தெரியாது என்றால் எனதுதந்தை காலத்தில் எழுதப்பட்டது. சொத்து வரலாறு எனக்கு நேரடியாக தெரியாது. சொத்து வரலாறு 1ம் வாதிக்கு மட்டும்தான் தெரியுமா என்றால் எனக்கும் தெரியும். தபசில் சொத்து ஆதியில் சுப்பிரமணிய நாடாருக்கு பாத்தியப்பட்டது. சுப்பிரமணிய நாடாருக்கு தபசில்சொத்து எவ்வாறு பாத்தியம் என தெரியாது. சுப்பிரமணிய நாடாரை நான் பார்த்தது இல்லை, அவர் இறந்ததும் எனக்கு தெரியாது. சுப்பிரமணியநாடாரின் வாரிசு சான்று என் கைவசம் இல்லை, 1ம் வாதியின் வசம் உள்ளது. சாமியாடி நாடாரின் மகன் காளிமுத்தை பார்த்துள்ளேன்.

3. பாகப்பிரிவினை பற்றி நேரடியாக தெரியாது, எனதுதந்தை சொல்லிதான் தெரியும். தபசில்சொத்தை பொறுத்து எத்தனை தடவை பிரிவினை நடைபெற்றது என்றால் சாமியாடிநாடாரும், சுப்பிரமணிய நாடாரும் சொத்தை இரண்டாக பிரித்தார்கள். பின்பு சுப்பிரமணிய நாடார் வாரிசுகள் மேலும் பிரித்துக்கொண்டோம். பிரிவினை கிடைத்த சொத்தை பொறுத்துதான்அனுபவம் செய்துவருகிறோம் என்றால் சரிதான்.

4. சாமியாடி நாடாரும், சுப்பிரமணிய நாடாரும் எந்தவருடம், எந்த தேதியில் பிரிவினை செய்தார்கள் என எனக்கு தெரியாது. இருவருக்கும் 6 ஏக்கர் 36 செண்ட் பாத்தியப்பட்டிருந்தது. சாமியாடிநாடாரும், சுப்பிரமணிய நாடாரும் பிரிவினை செய்ததை காட்டுவதற்கு ஆவணம் உண்டா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

5. காளிமுத்துநாடாருக்கும், சுப்பிரமணிய நாடார் வாரிசுகளுக்குமிடையே பிரிவினை நடந்ததா என்றால் அவர்கள் காலத்திற்கு முன்பே பிரிவினை நடைபெற்றுவிட்டது. சாமியாடி நாடாரும், சுப்பிரமணிய நடாரும் செய்துகொண்ட பிரிவினையில்தான் எனது தகப்பனாருக்கு புல எண்.87/1ல் 1 ஏக்கர் கிடைத்ததாக நான் கூறுகிறேன்.

6. சுப்பிரமணிய நாடார், ஆனையப்பபிள்ளைக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் சொத்து பிரிவினை செய்யப்படாத சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஆனையப்பபிள்ளை இறந்தபிறகு சொத்தை யார் அனுபவம் செய்துவந்தார்கள் என தெரியாது. ஆனையப்பபிள்ளையின் வாரிசுகள் எனக்குதெரியாது.

7. குற்றாலம் பிள்ளை, சுப்பிரமணிய நாடார் வாரிசுகளுக்கு எழுதிக்கொடுத்தாக சொல்லும் கிரையப்பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அந்த கிரையப்பத்திரத்தில் சொத்து பிரிவின்றி என்று காட்டப்பட்டுள்ளதா அல்லது எல்கைகள் போட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் பிரிவினை செய்யப்பட்டதால் எல்கைகள் போட்டு எழுதப்பட்டுள்ளது. அதற்கு விரோதமாக பத்திரத்தில் காட்டியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல.

8. சுப்பிரமணிய நாடாருக்கு 4 பிள்ளைகள். வெற்றிவேல் முருகன் எனது குடும்பத்தை சார்ந்தவர் என்றால் சரியல்ல. வெற்றிவேல் முருகனின் தந்தைபெயர் தங்கமுத்து. தங்கமுத்துவின் தந்தைபெயர் எனக்கு தெரியாது. வெற்றிவேல் முருகனை எதற்காக கட்சி சேர்த்துள்ளேன் என்றால் போலி பத்திரம் தாக்கல் செய்தததால் சேர்த்துள்ளேன்.

9. தபசில் சொத்தை பொறுத்து 2023ல் வில்லங்கம் போட்டுப்பார்த்தோம். மேற்படி வில்லங்கசான்று என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யலாம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் வில்லங்கசான்றிதழ் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, அதுகுறித்து 1ம் வாதிக்கு தான் தெரியும்.

10. சித்திரைக்கனி செங்கமால் வைத்துள்ளார் என்றால் தபசில் இடத்தில் வைக்கவில்லை. சித்திரைக்கனி அனுபவம் செய்துவரும் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல, எங்கள்

இடத்தில் மண் கொட்டி வைத்துள்ளார். மேற்படி மண்கொட்டியது சம்பந்தமாக சித்திரைக்கனியிடம் கேட்டேன், சாட்சி தற்போது தான் கேட்கவில்லை என கூறினார்.

11. புல எண்.87/1பி உள்ள வீட்டில் பிரதிவாதிகள் உரிமை கொண்டாடவில்லை. நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் எல்லாம் வீட்டுக்குள்ள தீர்வை ரசீது, பட்டா என்றால் சரிதான். புல எண்.87/1ஏ நிலம் சுப்பிரமணிய நாடார் அனுபவம் செய்ததை காட்டவோ, அவரது வாரிசுகள் அனுபவம் செய்ததை காட்டவோ எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

12. புல எண்.87/1பி எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் எனக்கு உட்பிரிவு தெரியாது. பிராது 1ம் தபசில் சொத்துக்கு கிழமேல், தென்வடல் அளவுகள் பிராதில் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. 2ம் தபசில் சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியாது, எல்கைகள் தான் தெரியும். காளிமுத்துநாடாருக்கு பட்டா பிறந்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் பட்டாவை பற்றி எனக்கு தெரியாது.

13. நான் உரிமை கொண்டாடும் 2ம் தபசில் சொத்து பிரதிவாதிகளின் வசம் உள்ளதாலும், அதை சுவாதீனம் ஒப்படைப்பு கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காவல்நிலையத்திலும் புகார் கொடுத்துள்ளேன். காவல்துறையில் நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டனர் என்றால் சரிதான்.

14. முதல்விசாரணையின் சொல்லியுள்ள சங்கதிகள் எல்லலாம் பிராதுக்கு முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றாலும், வா.சா.1 சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளை களையவேண்டும் என்ற நோக்கத்தில் பிராதுக்கு விரோதமாக முதல்விசாரணை உறுதிக்கூறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சொத்து பிரிக்கப்படவில்லை என்றாலும், 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் ஒருபகுதி கிடையாது என்றாலும், சித்திரைக்கனி கிரையம் வாங்கியவிவரம் எனக்கு தெரியும் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.